வெளியீடு - 05

අනලෛ

# அனலை

ANALAI

காலாண்டு சஞ்சிகை

2015 அக்டோபர்

ஊர்காவற்றுறை பிரதேசசபை அனலைதீவு பொது நூலக வெளியீடு

## தேசிய வாசிப்பு மாத சிறப்பு வெளியீடு







**2015ம் ஆண்டு தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த அனலையின் மாணவச் செல்வங்களை வாழ்த்துகின்றோம்...!**



ரவீந்திரன் மதுஷன்
16[illegible] புள்ளிகள்



சத்தியசீலன் மேனகன்
161 புள்ளிகள்

**'வாசிப்போம்! வளமிகு சமுதாயத்தை உருவாக்குவோம்'**

## வாசிப்பால் வளம் பெறுவோம்......

என்று மொழி உருவானதோ அன்றே வாசிப்புப் பழக்கமும் மனிதர்களிடையே உருவானது. இந்தப் பூவுலகில் தோன்றிய அறிஞர்கள், மாமேதைகள் அனைவருமே வாசிப்புப் பழக்கம் மூலம் உருவானவர்களே. “சிறந்த புத்தகம் சிறந்த நண்பர்கள்“ என்று கூறுவார்கள். ஆம், எமது ஓய்வு நேரங்களில் நாம் புத்தகங்களை வாசிக்கும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொண்டால் நாமும் இவ்வுலகில் ஒரு மாமேதையாகலாம் என்பதில் கிஞ்சிற்றும் ஐயமில்லை.

நாம் சிறு வயது முதலே வாசிப்புப் பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். ஓய்வு நேரங்களில் சிறந்த புத்தகங்களை நாம் வாசிப்பதால் நமது அறிவு விருத்தியடைவது மாத்திரமல்லாது ஓய்வு நேரத்தையும் பயனுள்ளதாக்கிக் கொள்ளமுடியும். "நண்பர்கள் பலர் நமக்குத் துன்பம் நேரும் போது நம்மை விட்டுப் பிரிகின்றனர். ஆனால், எச்சந்தர்ப்பத்திலும் நம்மை விட்டுப் பிரியாத நண்பர்கள் புத்தகங்களே" என்கிறார் ஒரு அறிஞர்.

உண்மையிலேயே புத்தகம் என்பது காரிருளில் செல்பவர்களுக்குப் பேரொளியாகவும் வழி தவறியவர்களுக்கு ஒரு வழிகாட்டியாகவும் திகழும். எப்போதென்றால் புத்தகம் வாசிக்கப்பட்டால் மாத்திரமே. புத்தகங்களை வாசிக்க வேண்டும் என்பதற்காக தேவையற்ற புத்தகங்களையெல்லாம் வாசித்தல் கூடாது. மாறாக, எமக்குத் தேவையான, தகுதியான புத்தகங்களைத் தெரிந்தெடுத்து வாசிக்க வேண்டும். வாசிப்புப் பழக்கத்தால் எமது அறிவூற்று பெருக்கெடுக்க எமக்குத் தகுதிவாய்ந்த புத்தகங்களைத் தெரிவு செய்வதற்கு நாம் தெரிந்திருக்க வேண்டும். அறிவியல் நூல்கள், மாமேதைகளின் சரித்திர நூல்கள், சமய சம்பந்தப்பட்ட நூல்கள் என்பன எமது அறிவுப் பசிக்குத் தீனி போடுவதாய் அமையவேண்டும்.

அன்று பல்வேறு துறைகளில் அறிஞர்கள் உருவாகினாலும் அவர்களுக்கு வாசிப்பதற்குப் போதிய நூல்கள் காணப்படவில்லை. ஆனால், இன்றோ வாசிப்பதற்கு இலட்சக்கணக்கான புத்தகங்கள் குவிந்து கிடப்பினும் அனேகர் அவற்றை உதாசீனப்படுத்துகின்றனர். அன்று புத்தகம் இல்லாமல் நாம் அழுதோம் இன்றோ “என்னை வாசிப்பதற்குயாரும் இல்லையே“ என்று புத்தகங்கள் ஏங்குகின்றன. அந்தளவுக்கு இன்று புத்தகங்கள் எடுப்பார் கைப்பிள்ளையாக மாறியிருக்கின்றன. புத்தகத்தின் மகிமையை அனேகர் உணர்ந்த பாடில்லை. இன்று பெரும்பாலானோர் தமது ஓய்வு நேரத்தில் வீண் விளையாட்டுக்களிலும், கேளிக்கைகளிலுமே ஈடுபடுகின்றனர். பாடசாலை நேரங்களில் மட்டுமே படிப்பது மற்றைய நேரங்களில், மற்றைய இடங்களில் வீண் கூத்துக்களில் ஈடுபடுவது என்று இன்றைய இளம் சமுதாயத்தினர் தமது வாழ்க்கையை வகுத்துள்ளனர்.

இந் நிலை மாற வேண்டும். வாசிப்பின் பயனை இவ்வுலகிலுள்ள அனைவரும் உணர வேண்டும். நூல்கள், நூலகங்களில் தூசு படிந்து இருக்கக் கூடாது. வீடுகளில் புத்தகங்கள் அலங்காரப் பொருளாகவன்றி அறிவைப் பெறும் பொருளாக மாற வேண்டும். இவை அனைத்தும் நிகழ வேண்டுமாயின் மானிடர்களின் உள்ளத்தில் அறிவுத் தாகம் உணரப்படவேண்டும். எனவே, “இன்றைய மாணவர்கள் நாளைய தலைவர்கள்“ என்ற கூற்றுக்கேற்ப மாணவர்கள் இந்தவாசிப்புப் பழக்கத்தைக் கூட்டிக் கொள்ள முயற்சி செய்ய வேண்டும். “வாசிப்பு மனிதனைப் பூரணமாக்குகிறது“ எனவே, இவ்வுலகிலுள்ள அனைவரும் ஓய்வு நேரங்களில் வாசிப்புப் பழக்கத்தை உண்டாக்கிக் கொள்வதன் மூலம் நாமும் ஒரு பூரண மனிதராக வாழ முயற்சிப்போமாக!

**திருமதி.தர்மிளா செந்தூரன்,**
**நூலகர்,**
**பொது நூலகம் - அனலைதீவு.**

வாசிப்புப் பழக்கம் என்பது அருமையான ருசி, அழகான பசி
ஒரு முறை சுவைக்கப் பழகிவிட்டால் அது தொடர்ந்து வரும்.

# வாசிப்பு ஒரு நேசிப்பு

மனிதன் சிரிக்கத்தெரிந்த சிந்திக்கத் கற்றுக்கொண்ட விலங்கு. கூர்ப்பின் பரிணாமத்தில் உயர் கொப்பில் ஊஞ்சலாடும் உயிரி. அவனின் அபரிமிதமான வளர்ச்சிக்க பல காரணிகள் கூட்டாக வலுச் சேர்த்த போதும் ஒவ்வொரு தனி மனிதனின் வளர்ச்சிக்கும் அவனது சிந்தனா சக்தியை கூர்மைப் படுத்துவதே சிறந்த வழியாகும். சிந்தனை என்பது இயல்பாக எழுகின்ற விடயமாகினும் சிந்தனை ஓட்டத்தை திசை முகப்படுத்தி வலுவூட்டி சிறந்த பெறுபேற்றை பிரசவிப்பதற்கு உதவியாக இருப்பது வாசிப்பு என்றால் அது மிகையாகாது.

வாசிப்பால் மனிதன் பூரணமாகின்றான் என்பது எம் முன்னோர்களின் பொருள் பொதிந்த வாக்கு. இவ்வாக்கு இரண்டு பொருள்பட பூரணமாக விளங்குகின்றது. எந்த விடயத்தையும் தெளிவாக வாசிப்பதன் மூலமே பூரண கருத்தை உள்வாங்க முடியும் என்ற கருத்து, மாறாக வாசிப்பதன் மூலம் பல்வேறு விடயங்களை தெரிந்து கொண்டு அறிவை பூரணமாக்கலாம் என்பது இன்னோர் கருத்து. மழைக்கு கூட பாடசாலைப் பக்கம் ஒதுங்காத பலர் சுய வாசிப்பின் மூலம் மாமேதைகளாகிய வரலாறுகளை நாம் பார்க்கின்றோம். அதுவே வாசிப்பின் பெரும் பயனை பறைசாற்ற சான்றாகும்.

பிறக்கும் ஒவ்வொரு குழந்தையினதும் மூளை வெள்ளை காகிதம் போன்றது. சிறு வயது முதல் நல்ல விடயங்களை தேடிப்பார்த்து பகுத்து ஆய்ந்து வாசிப்பதன் ஊடாக மூளையில் உரிய விடயங்கள் இலகுவாக பதியப்பட்டு விடுகின்றன. நாளாந்தம் வாசிப்பினை விருத்தி செய்யும் போது மூளை நாளதுவரைப்படுத்தப்படுகின்றது. எவ்வாறு ஒரு கணனி நிகழ்ச்சிக்கு உட்படுத்தப்படுகின்றதோ தொடர்ந்து அது புதிய தரவுகள் உள்ளகப்படுத்தப் படுகின்றதோ அது போல மூளையும் தொழிற்படுகின்றது. வாசிப்பு என்பது மூளைக்கான ஊட்டச்சத்தாக விளங்குகின்றது. புதிய சிந்தனைகளை பரிசீலிக்க துணை நிற்கின்றது.

இலங்கை அரசாங்கம் அக்டோபர் மாதத்தை தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபையுடன் இணைந்து தேசிய வாசிப்பு மாதமாக பிரகடனப்படுத்தி வாசிப்பின் தேவையை பொதுமக்களுக்கு உணரச்செய்ய பல்வேறு செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகின்றது. அந்தவகையில் ஊர்காவற்றுறை பிரதேசசபை நிர்வாகத்துக்கு உட்பட்ட அனலைதீவு பொது நூலகமும் பல்வேறு செயற்பாடுகளை திட்டமிட்ட ரீதியில் நடாத்தி வருகின்றமை மகிழ்ச்சிக்குரிய விடயமாகும்.

நூல் நிலையங்கள் பல்லாயிரக்கனக்கான நூல்களை தம்மகத்தே தாங்கி நிற்கின்றன. அந்நூல்கள் வெறும் காகிதங்கள் அல்ல. அவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு மனிதனதும் ஒவ்வொரு மூளைகள் என்று சொன்னால் பொய்யுரை அல்ல. ஒரு மனிதனின் சிந்தனை என்பது அவன் கற்கும் நூல்களின் வழியே தான் அமைகின்றது. ஏனைய நவீன சாதங்களுடன் ஒப்பிடுகையில் நூல்களுக்கென்று தனிச்சிறப்புகள் காணப்படுகின்றன. நூல்களுக்கும் வாசகனுக்கும் இடையே அன்னியோன்ய பிணைப்பு ஏற்படுகின்றது. சுதந்திரமான வழிகாட்டலும் நேரிய சிந்தனையும் ஏற்பட வாய்ப்பளிக்கின்றது. திணிப்புக்கள் அற்ற விருப்பு வெறுப்புகளுக்கேற்ப வாசகனுடன் நூல்கள் உலா வருகின்றன. விரும்பாதவற்றை, வயதுக்கு ஒவ்வாதவற்றை, சமூகத்திற்கு பொருத்தபாடற்றவற்றை விலக்கி தேவையானவற்றை தேவையான நேரத்தில் தேவையான அளவு நுகர நூல்கள் ஒத்துழைக்கின்றன.

உலகின் பல புரட்சிகளும், போராட்டங்களும், நவீன சிந்தனைகளும், தனிமனித விருத்தியும், சமூக பண்பாட்டு விழுமிய பாதுகாப்பும் நூற்பயனாக விளைந்ததேயன்றி ஒரு விபத்தாக நடந்தவையன்று. இன்றைய இணையவழி இயங்கும் பல்வேறு ஊடக சாதனங்களும் எம் அறிவுக்கு தீனி போடுகின்றன என்பது உண்மை ஆயினும் அவை இறைச்சிக் கோழிக்கு வழங்கப்படும் உணவே அன்றி ஆன்மாவுக்காக வழங்கப்படும் சுவாசக்காற்றுக்கு ஒப்பானதல்ல.

தனிமை – நூல் – சிந்தனை இம் மூன்றும் வழங்கப்பட்டால் வாசிப்பு எமக்கு ஒரு நேசிப்பாகவே அமையும். ஆனால் இம் மூன்றும் ஒருங்கே குவிக்கும் சக்தியை இன்றைய நவீன வாழ்க்கை முறைகள் எம்மை இழக்கச் செய்துவிட்டன. அமைதியான சூழலை பெறும் அல்லது பெற்றிடும் நூல்களுடன் அச்சூழலில் அமரவும் அல்லது அமர்த்தவும் சுய சிந்தனை வழிபடுத்தி ஆய்ந்து பொருள் தேடலும் எமக்கு அத்திப்பூ போன்றதே. எவனொருவன் நூல்களுடன் வாழ்க்கை நடாத்துகின்றானோ அவனே உலகின் வழிகாட்டியாவான். பல்வேறு துறைகளில் சிறந்து விளங்கிய அறிஞர்கள் எல்லாம் நூல்களுக்கு வாழ்க்கைப்பட்டவர்களாகவே இருந்திருப்பார் கள் என்பது கலப்படமற்ற உண்மை.

இன்னும் எமது தேசத்தில் தனிமை – நூல் – சிந்தனையை ஒருங்கிணைக்கும் நிறுவனங்களாக நூலகங்கள் விளங்குகின்றது என்பது மறுக்க முடியாத உண்மை. தேசிய வாசிப்பு மாதத்தின் நோக்கை வெற்றி கொள்ள நாமும் வாசிப்பை நேசிப்போம்! நூல்களை பயன்படுத்தி சிறந்த எதிர்காலத்திற்கு அச்சாரமிடுவோமாக.

சு.சுதர்ஜன்,
செயலாளர்,
ஊர்காவற்றுறை பிரதேசசபை.

"மனிதன் இறப்பது
ஒருமுறை தான்
ஆதலால் அஞ்சாதிரு!
வீரனாய் இரு"
- சுவாமி விவேகானந்தர் -



யாழ்ப்பாண குடாநாட்டின் வட மேற்கே அமைந்துள்ள சிறியனவும் பெரியனவுமான தீவுக்கூட்டத்திலே அனலைதீவு நடுத்தர அளவுடைய, நடுவாக அமைந்துள்ள ஒரு தீவாகும்.

தமிழும் சைவமும் பாரம்பரிய பண்பாடும் செழிந்தோங்கும் பழம்பெருமைகள் வாய்ந்த தீவுப்பகுதியிலே "ஓதக்கடல் சூழ் அனலையம்பதி" என்று நவாலியூர் சோமசுந்தரப்புலவராலே இத்தீவு சிறப்பித்து பாடப்பெற்றது. சைவ சமயப்பற்றும் செந்தமிழ் மொழிப்பற்றும் மிக்கோராகிய இவ்வூரவர்கள் கல்வித்துறையிலும் சிறப்புற்று விளங்குகின்றார்கள். இத்தீவின் வரலாறு பற்றிய கட்டுரைகள், நூல்கள் உள்ளூரிலும் பிறநாடுகளிலும் வெளிவருகின்ற இந்நேரத்திலே இது வரை பெரிதும் ஆராயப்படாமலிருக்கின்ற இத்தீவின் இலக்கியப் பாரம்பரியம் பற்றிய ஒரு அறிமுகத்தை இக்கட்டுரையூடாக தர எண்ணியுள்ளேன்.

ஒரு பிரதேசத்தின் சிறப்பை உணர்வதற்கு அப்பிரதேசத்தை சேர்ந்த இலக்கியங்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன.ஒரு பிரதேசத்தின் கலைகளும் இலக்கியங்களும் பிரதேச பண்பாட்டு சிறப்பை, புலமைப் பாரம்பரியத்தை எடுத்துக்காட்டி உயிர்ப்பூட்டுவனவாக இலங்குகின்றன. ஈழத்து தமிழ் இலக்கிய பாரம்பரியத்துக்கு தீவுப்பகுதியின் பங்களிப்பு மகத்தானது. சமய இலக்கியத்துறையிலும் தமிழ் இலக்கியத் துறைகளிலும் பெரும் பங்களிப்பு செய்கின்ற, செய்த தமிழ் அறிஞர்களையும், புலவர்களையும், கவிஞர்களையும் மற்றுமுள்ள இலக்கிய புலமையாளர்களையும் தீவுப்பகுதி தன்னகத்தே கொண்டுள்ளது. இவ்வகையில் அனலைதீவு கிராமத்தில் எழுந்த இலக்கியங்கள் பற்றிய ஆய்வுக்கு முன்னர் இவை பற்றிய முறையான ஆவணப்படுத்தலே தொடக்கம் பெறாத நிலையை குறிப்பிட்டு சொல்ல வேண்டியுள்ளது. பல்வேறு தேடல்களுக்கு பின்னர் முழுமைப்படுத்த வேண்டிய நிலையை கருத்திற் கொண்டு இவ்வூர் சார்ந்த இலக்கிய முன்னோடிகளாக விளங்கிய அறிஞர்கள் பற்றிய அறிமுகப்படுத்தலாக இக்கட்டுரை தொடரை தொடங்குகின்றேன்.

01

**அராலி வரகவி முத்துக்குமாரு புலவர்(1740-1827)**

"போர்த்துக்கேயராட்சிக் காலத்தில் மறைக்கப்பட்டிருந்த சைவ வழிபாட்டு மரபுகள் பல, ஒல்லாந்தர் காலப் பகுதியிலே சைவ,தமிழ் மக்கள் ஓரளவுக்கு சமய சுதந்திரமுடையவர்களாக விளங்கினார்கள். என்பதை இக்காலத்தெழுந்த இலக்கியங்கள் காட்டி நிற்கின்றன. ஒல்லாந்தர் காலத்திலே தமிழ்புலவர்கள் பலர் தோன்றி இலக்கியங்களை புனைந்தார்களெனத் தெரிகிறது. அவர்களுட் பலர் பாடிய நூல்களின் பெயர்கள் மட்டும் குறிப்பிடப்பட்டுள்ளன. செய்யுள்கள் எல்லாம் பாதுகாப்பாரின்றி அழிந்தொழிந்தன. பெரிய புலவர் பரம்பரையொன்று அக்காலத்தில் வாழ்ந்திருந்தது."

**(கலாநிதி.ஆ.சதாசிவம், ஈழத்துத் தமிழ்க் கவிதைக் களஞ்சியம் 1966 பக்கம் 92-94)**

இலங்கை சாகித்திய மண்டல வெளியீடாக 1966ல் வெளியான ஈழத்து தமிழ்க் கவிதைக் களஞ்சியம் எனும் நூலில் சங்க காலம் முதல் தேசிய எழுச்சிக்காலம் வரையிலான ஈழத்து இலக்கிய கர்த்தாக்களின் அறிமுகமும் அவர்களின் இலக்கியங்களிலிருந்து சில செய்யுள்களும் தரப்பட்டுள்ளன. 1796ம் ஆண்டிலிருந்து 1947ம் ஆண்டு வரை ஆங்கிலேயர் ஆட்சி இலங்கையில் நடைபெற்றது. 1658 முதல் 1795 வரையிலானது ஒல்லாந்தர் காலமாகும். இவ்விரு பகுதியார் காலங்களில் எழுந்த செய்யுள் இலக்கியங்கள் பெரும்பாலும் மதச்சார்புடையனவாக அமைந்திருந்தன. சமயக்கருத்துக்களை விளக்கும் வகையில் பல்வேறு வகைப்பிரபந்தங்கள் எழுந்த காலப்பகுதியாக குறிப்பிடுவர். தமிழ் மக்கள் வாழுமிடமெல்லாம் கோயில்கள் தோன்றின. இக்கோயில்களில் வீற்றிருக்கும் தெய்வங்கள் மீது பல வகையான பிரபந்தங்கள் பாடப்பெற்றன. இவற்றைப்பாடிய புகழ் பூத்த பரம்பரையில் தோன்றிய ஒருவராக வட்டுக்கோட்டையை சேர்ந்த அராலி குறிச்சியில் பிறந்தவரான முத்துக்குமாரு புலவர் விளங்குகின்றார். இவரது பிறந்த ஆண்டு பற்றிய பதிவை கலாநிதி ஆ.சதாசிவம் அவர்கள் தரவில்லை. ஆயினும் மறைந்த ஆண்டை 1827 எனக் குறிப்பிட்டுள்ளார். அதே சமயம் வேறொரு ஆவணத்தில் இவர் 1740ம் ஆண்டில் பிறந்தவர் எனக்குறிப்பிடப்பட்டுள்ளது. இத்தகவல் மேலும் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

இவரது கல்வி பற்றியோ யாரிடம் கற்றார் போன்ற விபரங்களோ இல்லாவிடினும்,அதி விரைவில் பாடல்களை இயற்றும் ஆற்றலுடையவராக இருந்துள்ளார். 'ஒரு பாடலை பாடுக' என்று கேட்டவுடன் முறையான பாடலைப் பாடுபவராக இருந்தமையால் 'வரகவி' என புகழ் பெற்றிருந்தார். இவர் ஊர்காவற்றுறை பகுதியில் அக்காலத்திலேயே ஒரு பாடசாலையை ஸ்தாபித்து பல மாணவர்களுக்கு பாடம் சொல்லி கொடுத்தவராக அறியப்பட்டார். இவர் நயினாதீவு,புங்குடுதீவுப் பகுதிகளிலும் வாழ்ந்துள்ளதாக சில செய்திகள் தெரிவிக்கின்றன. இவர் அனலைதீவை சேர்ந்த பெண்ணை திருமணம் செய்த வகையில் அனலைதீவில் வாழ்ந்தவராவார். அனலைதீவு ஐயனார் மீது மிகுந்த பக்தியுடையவராக விளங்கினார்.

(தொடரும்.......)

**கலைச்சுடர் அனலை க.சௌந்தரராஜசர்மா**

இன்று தலையில் கை வைத்து உட்கார்ந்தவனை கேள்!
நேற்று கையில் தலை வைத்து படுத்திருந்தேன் என்பான்.


# ஊர்ப் புதினங்கள்....!



2014 ம் ஆண்டு வடக்கு மாகாணத்தில் பிரதேசசபை மட்டத்தில் சிறந்த பேணல் நடவடிக்கைக்கான போட்டியில் முதலாவது நூலகமாக அனலைதீவு பொது நூலகம் தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபையினால் தெரிவு செய்யப்பட்டு கௌரவிக்கப்பட்டது.

கனடா அனலைதீவு கலாசார ஒன்றியத்தின் நிதிப் பங்களிப்பில் அனலைதீவு பிரதேச வைத்தியசாலைக்கான புதிய வெளி நோயாளர் பிரிவு கட்டடம் கட்டப்பட்டு, கௌரவ வடக்கு மாகாண முதலமைச்சர் சீ.வி.விக்கினேஸ்வரன் அவர்களால் 22.01.2015ம் திகதி வைபவ ரீதியாக திறந்து வைக்கப்பட்டது.



அனலைதீவு கோட்டைமாதா என்று அழைக்கப்படும் கௌரி அம்பாள் ஆலயத்துக்கு புதிய கட்டடம் கட்டப்பட்டு 09.02.2015 ம் திகதி கும்பாபிஷேகம் நடைபெற்றது.

அனலைதீவு சதாசிவ மகாவித்தியாலத்தின் 'மஹிந்தோதய தொழில்நுட்ப ஆய்வுகூடம்' 03.12.2015ம் திகதி வைபவ ரீதியாக திறந்து வைக்கப்பட்டது.



27.10.2015ம் திகதி கௌரவ வடக்கு மாகாண முதலமைச்சர் சீ.வி.விக்கினேஸ்வரன் அவர்களின் தலைமையில் பொது மக்களுக்கான குறைகேள் சந்திப்பு நிகழ்வு அனலைதீவு ஐயனார் ஆலய மண்டபத்தில் இடம்பெற்றது.

09.12.2015ம் திகதி அனலைதீவு பிள்ளையார் கோவிலுக்கான புதிய சித்திரத் தேர் செய்வதற்கான அங்குரார்ப்பண நிகழ்வு இடம்பெற்றது.

அனலைதீவு பொது நூலகத்துக்கான சிறுவர் பூங்கா அமைப்பதற்கான நடவடிக்கைகள் ஊர்காவற்றுறை பிரதேசசபையால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

அனலைதீவு பொது நூலகத்தின் வாசகர் வட்ட மற்றும் ஆலோசனைச் சபைக் கூட்டம் 15.09.2015ம் திகதி பொது நூலக மண்டபத்தில் இடம்பெற்றது.

## விழாக்கள்

தமிழர் திருநாள் தைத்திருநாள்
தரணியில் நன்றி செலுத்திடும் நாள்
புதிரை எடுத்துப் பொங்கலிட்டு
புத்தாடை அணிந்து மகிழ்ந்திடும் நாள்

சித்திரை மாதப் பிறப்புடனே
சிங்கள தமிழர் புதுவருடம்
இத்தரை மீதில் இலங்கிடவே
இறைவன் பாதம் தொழுதிடுவோம்

தீபத்திருநாள் ஒளி வீசும்
தீய நரகாசுரன் அழிந்து
பாவம் பழிகள் நீங்கியதால்
பணிந்து சுடரை ஏற்றிடுவோம்

நத்தார் தாத்தா வந்திடுவார்
நாமும் சேர்ந்து ஆடிடுவோம்
இப்பார்மீது யேசு பிரான்
இறங்கி வந்த திருநாளாம்

நோன்புப் பெருநாள் நபிவழியில்
நோன்பு விரதம் காத்து நிற்கும்
மாண்புமிகு ஹஜ் பெருநாள்
மகிழ்ந்தே விழாக்கள் கொண்டாடிடுவோம்.

**திருமதி.கௌரி கேதீஸ்வரநாதன்,**
**ஓய்வு நிலை அதிபர்,**
**அனலைதீவு வடலூர் அ.த.க.பாடசாலை.**

## நாமும் கற்றிடுவோம்

சின்னஞ் சிறிய சிறுவர்களே
சிறந்த நல்ல சிறுமிகளே
நல்ல பெயரை நாம் கேட்டு
நாமும் நன்றாய் கற்றிடுவோம்

எறும்பு போல சுறுசுறுப்பாய்
என்றும் இருக்கக் கற்றிடுவோம்
உழைக்கும் எருது தனை பார்த்து
உயர்ந்து வாழப் பழகிடுவோம்

காகம் போலக் கூட்டுறவாய்
காலம் முழுக்க இருந்திடுவோம்
ஒழுக்கம் சிறந்த புறாவைப் போல
உணர்ந்து வாழப் பழகிடுவோம்

நாயைப் போல நன்றியுடன்
நாளும் இருக்கப் பழகிடுவோம்
தாயை என்றும் வணங்கிடுவோம்
தந்தை பாதம் போற்றிடுவோம்

**செல்வி.ச.சுவேதிகா,**
**தரம் - 11,**
**யா/அனலைதீவு சதாசிவ மகாவித்தியாலயம்.**

## புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவன் உள்ளத்திலிருந்து....!

சப்த தீவுகளில் ஒன்றான அனலைதீவில் உள்ள பாடசாலையான யா/அனலைதீவு தெற்கு அரசினர் தமிழ்க் கலவன் வித்தியாலயத்தில் தரம்-05 இல் கல்வி கற்று புலமைபரீட்சையில் 160 புள்ளிகளைப் பெற்று நான் கல்வி கற்ற பாடசாலைக்கும், கல்வி கற்பித்த ஆசிரியருக்கும், எமது அதிபருக்கும் பெருமை சேர்த்து பலராலும் பாராட்டப்பட்டேன்.

நான் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடையும் நோக்கில் எங்கள் கிராமத்தில் "நடுநெற்றியில் திலகம் போல்" ஒளிவிட்டு மலர்ந்து கொண்டுள்ள அறிவுக் களஞ்சியமாகவும் என் இனிய தோழனுமான அனலைதீவு பொது நூலகத்திற்கு ஓய்வு நேரங்களில் செல்வேன். அங்கிருந்து பல பயிற்சி புத்தகங்களை இரவல் பெற்று கொண்டு வந்து படிப்பேன். நான் பரீட்சையில் சித்தி பெறுவதற்கு பொது நூலகம் பெரிதும் துணையாக இருந்ததுடன் எனது குடும்பத்தினரும் எனது கற்றலுக்கு உதவிகள் பல புரிந்தனர். இவற்றை அனைத்தையும் கருத்தில் கொண்டு மேன் மேலும் படித்து சமூகத்திற்கு ஒரு வழிகாட்டியாக வரவேண்டும் என உறுதி பூண்டுள்ளேன்.

**சத்தியசீலன் மேனகன்**

முன்னோக்கி செல்லும் போது கனிவாயிரு.
ஒருவேளை பின்நோக்கி வரநேரிட்டால் யாராவது உதவுவார்கள்.

## சிறுவர்களே எதிர்காலத்தை உருவாக்கும் சிற்பிகள்...!

இன்றைய சிறுவர்களே! நாளைய தலைவர்கள் நாளைய சமுதாயம் நலமாக அமைய வேண்டு என்றால் நாம் அதற்கான நல்வழி முறைகளை நம் சிறுவர்களிற்கு கற்றுக் கொடுப்பது அவசியமாகும். குழந்தை உளவியலை விளங்கிக் கொண்டு அவர்களிற்கு ஏற்ற வகையில் கற்பிப்பதும் வழிப்படுத்துவதும் நம் ஒவ்வொருவருடைய முக்கிய கடமையாகும். சிறுவர்கள் சிறப்பாக வழி நடத்தப்பட்டால் அவர்களின் ஆளுமை எமது சமுதாயத்தை நல்வழிப்படுத்தும். என்பதில் ஐயமில்லை. இதனை

**"எந்தக்குழந்தையும் நல்ல குழந்தைதான்
மண்ணில் பிறக்கையிலே பின் நல்லவர் ஆவதும்
தீயவர் ஆவதும் அன்னை வளர்ப்பினிலே"**

என்ற பாடலின் மூலம் நாம் தெளிவாக அறிந்து கொள்ளலாம்.

**"அரிது அரிது மானிடராதல் அரிது"** என்பது ஒளவைப்பிராட்டியின் வாக்கு.
இந்த மனிதப் பிறவியே உலகிலுள்ள உயர்ந்த பிறவியாக் கூறப்படுகின்றது. அந்த மனிதப் பிறவிக்கே ஆறு அறிவையும் இறைவன் படைத்துள்ளான். அந்த பிறவியை கண்போல் காத்து முத்தியடைவது நம்முடைய கடமையாகும். சான்றோர்கள் தங்கள் குடும்பத்திலே ஒரு குழந்தை பிறந்துவிட்டால் அந்த குழந்தைச் செல்வத்தை உயிரினும் மேலானதாக எண்ணினார்கள். குழந்தைக்கு முதலிலே வாழ்த்துப் பாடுபவள் மருத்துவிச்சியாகவே இருப்பாள்.

அவ்வாறான வாழ்த்துப்பாவிலே குழந்தையின் எதிர்காலத்தைக் கருத்திற் கொண்டே வாழ்த்தினை அமைத்திருக்கிறார். அவ்வாறான பாடலிலே குழந்தையை நோக்கி தாயிற்கும் தந்தைக்கும் சுற்றத்தாருக்கும் ஊருக்கும் தேசத்திற்கும் ஆசானுக்கும் தெய்வத்திற்கும் நல்ல பிள்ளையாக வாழ்ந்து காட்ட வேண்டும் என்று வாழ்த்துவாள். நூற்றாண்டு வாழ்வதற்காய் இந்தப் பூமியிலே வந்துதித்த பிள்ளையல்லவா.

எம் முன்னோர்கள் ஒவ்வொருவரும் குழந்தைகளிற்கு நல்ல பழக்க வழக்கங்களைக் கொடுத்து நாளைய சந்ததியினரை உருவாக்கும் பிள்ளைகள் இவர்கள் என்பதை நோக்காகக் கொண்டு அவர்கள் தாயின் வயிற்றிலிருந்து பிறந்தது தொடக்கம் பதினெட்டு வயது வரைக்கும் பாலகனாகவே கருதி அந்தப் பிள்ளைக்கு நல்ல கல்வியை, அறக்கருத்துக்களை, நீதிக் கதைகளை கற்றுக் கொடுத்தனர். நாமும் **'பச்சை மரத்திலே ஆணி அறைந்தது போல்'** சிறு பராயத்திலே கற்றுக் கொடுத்தால் அவர்களின் உள்ளத்தை விட்டு அகலாமல் அப்படியே இருக்கும். எனவே சான்றோருடன் சிறு பிராயத்திலிருந்து வளர்த்தால் எமது சிறுவர்கள் எதிர்காலத்தை உருவாக்கும் சிற்பிகளாவர். சிறுவர்கள் எதிர்காலத்தை உருவாக்கும் சிற்பிகளாக உருவாக்கப்பட வேண்டும் எனில் சிறுவர்களிடம் பெரியோர்கள் செய்யும் துன்புறுத்தல்களை களைதல் வேண்டும். அவ்வாறு சிறுவர்கள் துன்புறுவதை யாரும் அறிந்தால் உடனடியாக அவற்றைத் தடுக்க பொது மக்கள் கண்காணிப்பு முக்கியமென சர்வதேச தொழில் நிறுவனம் வலியுறுத்துகின்றது.


சிறுவர்கள் அநாதரவற்ற நிலையிலே வளர்க்கப்படவோ அல்லது அவ்வாறோ காணின் அவர்களை பராமரிக்கும் இல்லங்களில் சேர்த்து விட்டால் அதனைப் போன்ற புண்ணியம் வேறொன்றுமில்லை. ஏனெனில் அந்தச் சிறுவன் என்றும் நன்றியுடையவனாகவும் எதிர் காலத்திலே அந்த இல்லத்தினை பாதுகாப்பவனாகவும் நாட்டிலே தன்னைப் போன்ற சிறார்கள் உருவாக்கப்படக்கூடாது என்பதில் சிறுவர்களை எதிர்காலத்து சிற்பிகள் ஆக்குவதில் முன்னோடியாக உள்ளான் என்றால் அதைப்போன்ற தொன்று வேறெதுவுமில்லை.

சிறுவர்கள் அன்றும் இன்றும் மதிக்கப்பட்டு வருகிறார்கள் என்பதற்கு அன்றைய பாரதியின் பாடல்களில் இருந்து இன்றைய புலவர்கள் வரை எடுத்துக்காட்டலாம். பாரதியார் தனது பாடலில் சாதிக் கொடுமை, சமத்துவம், ஒற்றுமை, கல்வி, விளையாட்டு, கோபம் கொள்ளாமை, புதிய ஆத்திசூடி என்றெல்லாம் உருவாக்கி சிறுவர்களை எதிர் காலத்தில் சிற்பிகளாக உருவாக்க இவர்கள் முனைந்தார்கள். பாரதியார் கூறும் போது **"ஆயிரம் அன்ன சத்திரங்கள் கட்டுவதிலும் ஆங்கோர் ஏழைக்கு எழுத்து அறிவித்தல் புண்ணியமாகும்"** என்று கூறுவதில் இருந்து அவர் சிறுவர் பால் கொண்ட பெருமதிப்பு விளங்குகின்றது.

ஆகவே இன்றைய சிறுவர்களே நாளைய தலைவர்களாகவும் கல்வி மான்களாகவும் மாறுவதற்கு நம் சூழலும் அறிவுசார் நூல்களும் நம் முன்னோர் காட்டிய பாதையுமே காரணமாகும் எனக் கூறி அகமகிழ்கின்றேன்.

**திருமதி. ற. சுதர்சினி,**
**நூலக பரிசாரகர்,**
**பொது நூலகம் - அனலைதீவு.**

மாறுதல்கள் நிச்சயம் தவிர்க்க முடியாதவை. மாற்றங்களை எதிர்கொள்ள மன உறுதி வேண்டும். மாற்றம் என்பதைத் தவிர மாறாதது உலகில் இல்லை.



## பனிதரும் அனுபவம்

பனிப்பொழிவு மகிழ்ச்சி என
வியந்து பார்த்து மகிழ்ந்தேன்.
சில்லென குளிர்காற்று முகத்தில்
பட்டதும் இதுதான் குளிரென
உணர்ந்துகொண்டேன்.
நாட்கள் கடந்து செல்லச் செல்ல
பனிப்பொழிவு அதிகரிக்க
சில்லென்று இருந்த குளிர்
உடற் பாகங்களை விறைக்கச்
செய்திடவே தயார் நிலையில்
தொங்கவிட்ட ராட்சத உடைகள்
என் மேனி போர்த்திக்கொள்ள
நடந்து சென்றது பாதங்கள்
நடைபாதை இருமருங்கும்
வடதுருவ மனிதர்களின் வாழ்குடில் போல்
பனிக்குவியல்கள் நிமிர்ந்து கிடந்தன.
முகம் பார்க்கும் கண்ணாடி போன்று
எதிர்முகம் காட்டியது வழிப்பாதை
பாதங்கள் பட்டதுமே விரைவாக
பத்தடி தூரம் வழுக்கிச் சென்றேன்.
யான் செய்த நல்வினையால்
தடுமாறி நின்றுகொண்டேன்.
அய்யகோ பரிதாபம் நான் கண்ட காட்சி
அண்ணாந்து பார்க்கையில்
நமைக் காக்கும் மரங்கள் மீது
பனித்துளிகள் வைரங்கள் பதித்ததுபோன்று
ஒளிபரப்பிக் கொள்ள
கண்ணுக்கினிய காட்சியானது
மனமோ இயற்கை பனித்துளிகள்மீது
பகை கொண்டது
உயிரினங்கள் வாழ்வதற்கு
காற்றை வடிகட்டித் தருவதே
மரங்கள் என்பதினால்
மரங்களே செய்வதறியாது
நிலை குலைந்து உடல் கிழிந்தும்
சிதைந்தும் சாய்ந்தும் துவழும் காட்சியை
யார்தான் சகித்துக்கொள்வர்
பனிப்பொழிவில் . மானிடருக்கே
உயிர்ப்பிச்சை கொடுப்பதுவோ
மின்சாரம் என்பதையறிந்த
பனித்துளிகள் மரங்கள் மூலமே
மின்னிணைப்பை அனுப்பித்தே
மின்தடையை அல்லவா ஆக்கியது
இயற்கையின் பனித்துகள்களை
ஆனந்தமாய் வரவேற்று ரசித்த நான்
அதே பனித்துளிகள் துன்பத்தைத்
தந்துவிட்டதை எண்ணிக்கொண்டேன்
இன்பமும் துன்பமும் இரு துருவங்கள்.
இயற்கையின் நியதியும் அதுவே
என்பதைப் புரிந்துகொண்டேன்.

த. நாராயணன்
கனடா

## அம்மா...

பத்து மாதம் சுமந்து
நான் கொடுத்த
வலியையும் தாங்கி
பாரினிலே வைத்து விட்ட
என் அன்னை எனக்காய்
பட்ட பாடுகள்
எத்தனையோ... எத்தனையோ
அவள் வாழும் வாழ்வில்
அர்த்தங்கள் சொல்ல
எனக்கு வார்த்தைகளே இல்லை.
தன் உதிரத்தை எனக்காய்
பாலாக்கியது மட்டுமல்ல,
வியர்வையாகவும் ஆக்கினாள்
கள்ளம் கபடம் அற்ற என் அன்னை.
தன் வாழ்வில் தந்ததைக் கூட
எதிர்பாராத தனிமரமாய்
எந்த சுகத்தையும்
அனுபவிக்காமல்
மனதைக் கல்லாக்கி
உயர்ச்சியை உறைய வைத்து
உதிரத்தை வியர்வையாக்கி
எனக்காய் வாழ்ந்து
என்னை உயர்த்தினாள்.
இந்த பிறப்பில் கடவுள் தந்ததில்
பெறுமதியானது என்
அன்னை மட்டும்தான்..
என் அன்னை உள்ளவரை
நான் இப்பாரினிலே சிறப்புறுவேன்.
என் அன்னை இல்லை எனில்
உயிர் அற்ற உடலாய் நடமாடுவேன்.

என்றும் அவளுக்காய்
வை.தனேஸ்,
5ம் வட்டாரம்,
அனலைதீவு.

# பெண்ணே நீயும் பேதையோ?

பெண்ணே நீ ஓர் பேதையோ?
பெண்ணியம் என்பதும் வேசமோ?
வண்ணக் கனவுடன் வஞ்சிக்கும்
கண்ணைப் பறித்த மதுக் கிண்ணமோ?
அதுவே அறிஞரின் ஆசையோ?
அன்பென்ற யாவுமே சாபமோ?

சிசுவாகி நீயும் தாய்மடி வந்தாய்
உசிராய் தந்தை தோள் வலியானாய்
சிலையென ஏனோ சிரிக்கச் செய்தாய்
மலைபோல் மனதை மைவிழி பறித்தாய்

கல்வியின் கடலில் நீந்தச் செய்தாய்
கரைதனை எங்கே கண்டு பிடித்தாய்?
கண்ணியம் கடமை கட்டுப்பாடெல்லாம்
களைப்பாறிச் செல்லும் கால்மரமானாய்
தொழிலைத் தேடி தோல்விகள் கண்டும்
தொடர்ந்து வாழ்வைத் தோளில் சுமந்தாய்

காதலின் வலையில் விழுகின்றபோதும்
திருமண சந்தையில் விலைபொருளானாய்
வருடிச் செல்லும் காற்றலை மீதும்
கருவிழியாள் உந்தன் கன்னியின் தரமோ
கடைதனில் மெல்ல தெருச் சரக்கானாய்

திருமணம் பெண்ணைத் திகைப்பூட்டுமே
மறுமணம் அவளைத் திகிலூட்டுமே
ஆறாத இன்பமும் தீராத சோகமும்
தீண்டித் தீண்டி உயிர் குடித்திடுமே
மணமகள் ஒருத்தி தோற்றிடும்போது
மலடி என்பர் பலர், விசரி என்பர் சிலர்
மதிகெட்ட மாந்தர் இன்னும் அலி என்று அழுவர்

பெண்மை என்பதன் வெற்றி எங்கே?
தாய்மை என்பதில் மட்டும் தானா?
வன்மை இல்லா வரலாறு படைக்கும்
வள்ளல் நபிகளின் வார்த்தையில் தானா?
பிள்ளை என்று உள்ளவரை
பிறக்கும் போது இறக்கும் வரை
கள்ளை உண்ட போதைதனில்
கொள்ளை போகும் உள்ளம் வரை
பெண்ணே நீயும் பேதையோ?
பெண்ணியம் இங்கே விதிவழியோ

திருமதி. கஜேந்திரன் அஞ்சலா,
5ம் வட்டாரம்,
அனலைதீவு.

## அனலைதீவு பொது நூலகத்தால் தேசிய வாசிப்பு மாதம் -ஐப்பசி-2015 ஐ முன்னிட்டு நடாத்தப்பட்ட போட்டிகளின் முடிவுகள்

**திருக்குறள் மனனப் போட்டி-(தரம் - 1)**
முதலாம் இடம் - தி.மதுசிகா
(அனலைதீவு வடலூர் அ.த.க.பாடசாலை)
இரண்டாம் இடம் - ர.கோபிசன்
(அனலைதீவு தெற்கு அ.த.க.பாடசாலை)
மூன்றாம் இடம் - ர.நிசானிக்கா
(அனலைதீவு தெற்கு அ.த.க.பாடசாலை)

**வாசிப்பு போட்டி-(தரம் - 2,3)**
முதலாம் இடம் - கு.அபிசாயினி
(அனலைதீவு தெற்கு அ.த.க.பாடசாலை)
இரண்டாம் இடம் - சி.கௌசிகா
(அனலைதீவு வடலூர் அ.த.க.பாடசாலை)
மூன்றாம் இடம் - ர.டினோஜா
(அனலைதீவு தெற்கு அ.த.க.பாடசாலை)

**பாவோதல் போட்டி-மூதுரை- (தரம் - 4,5)**
முதலாம் இடம் - த.பிரியா
(அனலைதீவு வடலூர் அ.த.க.பாடசாலை)
இரண்டாம் இடம் - தி.லக்சிகா
(அனலைதீவு வடலூர் அ.த.க.பாடசாலை)
மூன்றாம் இடம் - கு.பவித்திரா
(அனலைதீவு தெற்கு அ.த.க.பாடசாலை)

**பாவோதல் போட்டி-நல்வழி- (தரம் - 6,7)**
முதலாம் இடம் - த.தாட்சாயினி
(அனலைதீவு சதாசிவ மகா வித்தியாலயம்)
இரண்டாம் இடம் - இ.விதுஷாந்
(அனலைதீவு சதாசிவ மகா வித்தியாலயம்)
மூன்றாம் இடம் - இ.கரணி
(அனலைதீவு சதாசிவ மகா வித்தியாலயம்)

**சுவரொட்டிப்போட்டி- (தரம் -8,9)**
முதலாம் இடம் - உ.யட்சணன்
(அனலைதீவு சதாசிவ மகா வித்தியாலயம்)
இரண்டாம் இடம் - ச.கிருத்திகா
(அனலைதீவு சதாசிவ மகா வித்தியாலயம்)
மூன்றாம் இடம் - சி.சிவஜன்
(அனலைதீவு சதாசிவ மகா வித்தியாலயம்)

**கட்டுரைப்போட்டி-(தரம் -10,11)**
முதலாம் இடம் - பா.நித்தியா
(அனலைதீவு சதாசிவ மகா வித்தியாலயம்)
இரண்டாம் இடம் - உ.துஸ்யந்தன்
(அனலைதீவு சதாசிவ மகா வித்தியாலயம்)
மூன்றாம் இடம் - ச.சுவேதிகா
(அனலைதீவு சதாசிவ மகா வித்தியாலயம்)

(10ம் பக்கம் பார்க்க)

## அனலை 05

(9 பக்க தொடர்ச்சி)

முன்பள்ளி சிறுவர்களுக்கான கதை சொல்லும் போட்டி
முதலாம் இடம் - நா.யாகவி
(நாவலர் முன்பள்ளி)
இரண்டாம் இடம் - நா.யாகினி
(நாவலர் முன்பள்ளி)
மூன்றாம் இடம் - நா.மிருநஞ் ஜெயசர்மா
(பாலமுருகன் பள்ளி)

வாசகர்களுக்கான பொது அறிவுப்போட்டி
முதலாம் இடம் - செல்வி.பே.சாந்தினி
(3ம் வட்டாரம், அனலைதீவு)
இரண்டாம் இடம்
(இரண்டு பேர்)
திருமதி.க.அஞ்சலா
(4ம் வட்டாரம்,அனலைதீவு)
செல்வி.ம.நிலாஜினி
(5ம் வட்டாரம்,அனலைதீவு)
மூன்றாம் இடம் - செல்வி.செள.கேமமாலினி
(5ம் வட்டாரம்,அனலைதீவு)

## சிந்தனைக்கு சில துளிகள்......!

✔ தவறு நேர்ந்து விடுமோ என்று அஞ்சி அஞ்சி
எந்த செயலையும் செய்யாமல் பின் வாங்குவது இழிவானது.

- ஹென்றி போர்டு -

✔ நீங்கள் விரும்புவது ஒருவேளை உங்களுக்கு கிடைக்காமல் போகலாம்.
ஆனால் உங்களுக்கு தகுதியானது உங்களுக்கு கண்டிப்பாக கிடைத்தே தீரும்.

✔ வாழ்வில் உன் தோல்வியைக் கண்டு மகிழும் ஒருவரையேனும் நீ பெற்றிருப்பின்
உன் வாழ்வின் மிகப் பெரிய முதல் தோல்வி அதுவாகவே இருக்கும்.

✔ அரிய சாதனைகள் அனைத்தும் வலிமையினால்
செய்யப்பட்டவை அல்ல. விடாமுயற்சியினால் தான்.


-சாமுவேல் ஜான்சன்.

✔ இறைவன் மனிதர்களுக்குச் சிறிதும் அநீதி இழைப்பதில்லை - ஆனால்
மனிதர்கள்தான் தங்களுக்குத் தாங்களே அநீதி இழைத்துக் கொள்கிறார்கள்

- நபிகள் நாயகம் -

✔ நேற்று அசாத்தியமாய் இருந்தது.
இன்று சாத்தியமாகும் அற்புதத்தை
ஒவ்வொரு நாளும் நாம் கண்டு வருகிறோம்

- காந்திஜி -



புத்தக பொக்கிஷம் என்று அழைக்கப்படும் நூலகங்கள் பற்றி முன்னுரை எழுத வேண்டிய அவசியம் இல்லை ஏனெனில் அதன் பயன்பாடுகளும் தேவைகளும் நாம் எல்லோரும் அறிந்த ஒன்றுதான். வரலாற்று தகவல் மற்றும் அது தொடர்பான ஆவணங்கள் ஒரு தலைமுறை மக்களிடமிருந்து மற்றொரு தலைமுறை மக்களுக்கு சென்றடைவது நூலகங்களின் வாயிலாகத்தான் என்றால் மிகையில்லை.

இந்த நூலகம் என்ற அமைப்பை உலகில் முதன் முதலில் நிறுவியவர்கள் பண்டைய காலங்களில் மொசபதேமியர்கள் என்று அழைக்கப்பட்ட தற்போதைய ஈராக்கியர்கள் தான்.

பண்டைய மொசபதேமியப் பிரதேசம் என்பது தற்போதைய டைகிரிஸ் மற்றும் யுபிரட்டஸ் ஆகிய ஆறுகளுக்கு இடைப்பட்ட நிலப்பரப்பாகும். முன்பு மொசபதேமியா என்ற ஒரே பெயரால் அழைக்கப்பட்ட கண்டம் தற்போது ஈரான், ஈராக் மற்றும் சிரியா ஆகிய பெயர்களில் அழைக்கப்படுகிறது. இக்கண்டத்தில் குறிப்பிடத்தக்க நான்கு பேரரசுகளாக விளங்கியவை சுமேரியா, பாபிலோனியா, அசிரியா மற்றும் அக்காத்தியர் ஆகும். மிகவும் புகழ் பெற்ற நாகரீகங்களாக உலகம் அடையாளம் கண்ட பாபிலோனியா மற்றும் சுமேரியா போன்ற நாகரீகங்கள் இங்கிருந்து பிறந்ததுதான்.

ஏறத்தாழ 3300 ஆண்டுகளுக்கு முன்பு அசிரியப் பேரரசின் நிர்வாக துறையில் ஏற்பட்ட குளறுபடிகளை களைய அப்போதைய அசிரியப் பேரரசின் அரசரான சென்னாசெர்ப் (கி.மு.1300 - கி.மு.1200) அரசாங்கத்தின் முக்கியமான ஆவணங்கள் அனைத்தையும் களிமண் தகடுகளில் எழுதி அவற்றை சூளைகளில் சுட்டு காயவைத்து பாதுகாப்பான இடங்களில் பத்திரமாக வைக்கும்படி உத்தரவிட்டார்.

இதனை தொடர்ந்து அரசாங்கத்தின் ஒப்பந்தங்கள், அரசாணைகள், அரசாங்க கடிதங்கள், அரசு உளவாளிகளிடம் இருந்து பெறப்படும் உளவு அறிக்கைகள், அரசு நிர்வாகத்துறையின் கீழ் வரும் முக்கிய ஆவணங்கள் போன்றவை களிமண் தகடுகளில் எழுதி சூளைகளில் சுட்டு அரசு கருவூலங்களிலும் சில கோவில் கருவறைகளிலும் பாதுகாப்பாக வைக்கப்பட்டது. நாளடைவில் உயிர்காக்கும் மருத்துவக் குறிப்புகள், சமய நூல்கள் போன்றவையும் எழுதி பாதுகாப்பாக வைக்கப்பட்டது.


அசிரியப் பேரரசின் கடைசி அரசரான அசுர்பானிபல் (கி.மு.700 - கி.மு.600) காலத்தில் இக்களிமண் தகடுகளின் எண்ணிக்கை முப்பதாயிரத்தையும் தாண்டியது. அத்தனையையும் வெவ்வேறு இடங்களில் வைத்து பாதுகாப்பது சிரமமாக இருந்த காரணத்தினால் அனைத்தையும் அசிரியாவின் (தற்போது ஈராக்) தலைநகரான நினிவாஹ் (Nineveh தற்போது மொசுல் (Mosul) ஒன்றிணைத்து அவற்றை துறைவாரியாக பிரித்து அடுக்க உத்தரவிட்டார். இதன்படி ஒவ்வொரு களிமண் தகடுகளும் துறை வாரியாக பிரித்து அடுக்கி பொதுமக்கள் பார்வைக்கு என்று விடப்பட்டது. இதுதான் உலகில் அமைக்கப்பட்ட முதல் நூலகம் ஆகும். இந்த நூலகம் The Royal Library of Ashurbanipal என்ற பெயரில் அழைக்கப்பட்டது. எனினும் பெரும்பாலான களிமண் தகடுகள் அரசாங்க ஆவணங்களாகத்-தான் இருந்தது.

இந்த நூலகத்தை பற்றி தற்செயலாக கேள்விப்பட்ட அலெக்ஸாண்டர் (கி.மு.356 - கி.மு.323) நேரில் சென்று பார்வையிட்டார். அதனைதொடர்ந்து Ashurbanipal நூலகத்தை போல் அல்லது அதனைக்காட்டிலும் பிரம்மாண்டமான ஒரு நூலகத்தை கட்ட வேண்டும் என்ற எண்ணம் அவருள் தோன்றியது. எகிப்த்தியர்கள் பாப்பிரஸ் தாள்களில் எழுதி வந்த அந்தக்காலத்தை அலெக்ஸாண்டர் சாதுர்யமாக பயன்படுத்திக்கொண்டார். இதனைத் தொடர்ந்து எகிப்த்திலுள்ள அலெக்ஸாண்ட்ரியா நகரில் இதற்கான ஆயத்த பணிகள் துவங்கப்பட்டது. உலகம் முழுவதிலும் கல்வி, கலை, இலக்கியம், கணிதம், அறிவியல், மருத்துவம் ஆகிய துறைகளில் இருந்து சிறந்த நூல்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு அவை கிரேக்கத்தில் மொழிபெயர்க்கப்பட்டு பாப்பிரஸ் தாள்களில் எழுதப்பட்டது.

பணிகள் துவங்கிய சிறிது காலத்திலேயே அலெக்ஸாண்டர் இறந்து போனாலும் அலெக்ஸாண்டரின் நெருங்கிய நண்பரும் அப்போதைய எகிப்தின் அரசருமான தலாமி (Tolemy) (கி.மு.305 - கி.மு.282) முன்னின்று பணிகளை மேற்பார்வையிட்டு நிறைவு செய்தார். இறுதியாக கி.மு.300-ல் எகிப்தின் அலெக்ஸாண்ட்ரியா நகரில் ஏழு இலட்சத்திற்க்கும் அதிகமான பாப்பிரஸ் தாள்களை கொண்ட முதல் பொது நூலகம் அமைக்கப்பட்டு The Royal Library of Alexandria என்று பெயரிடப்பட்டது.

அதன் பிறகு ஆக்ஸ்போர்டு போன்ற புகழ் பெற்ற பல்கலைக்கழகங்கள் நூலகத்தின் பயன்பாடுகளை அறிந்து தங்களது பல்கலைக் கழக வளாகங்களிலிலேயே நூலகங்களை நிறுவத் தொடங்கின. அதன் பிறகு நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாக நூலகங்கள் பல்வேறு மாற்றங்களை சந்தித்து தன்னை வளர்த்துக் கொண்டு ஒரு புதிய பரிணாமத்தை அடைந்தது.

இ.ராஜ்பாரதி,
பொறுப்பதிகாரி,
பிரதேசசபை உப அலுவலகம் - அனலைதீவு



துன்பங்கள் அனுபவித்த காலத்தை
மறந்து விடு - ஆனால்
அது உனக்கு கற்பித்த பாடத்தை
மறந்துவிடாதே !
- பெஞ்சமின் பிராங்கிளின் -

முழுக்க முழுக்க சக்கரையாக இருந்து விடாதே
உலகம் உன்னை விழுங்கி விடும்.

## ஊர்காவற்றுறை பிரதேசசபை

# அனலைதீவு பொது நூலகம்

### பணிக்கூற்று

☞ அனைத்து பிரஜைகளும் தகவல் மற்றும் அறிவை பெறுவதை இலகுவாக்கும் தொடர்புச் சாதன வலையமைப்புக்களுட்பட அனைத்து சேவைகளையும் கொண்ட நூலக கட்டமைப்பாக அபிவிருத்தி அடையப் பணிகளாற்றுதல்.

### நோக்கக்கூற்று

☞ அறிவிலுயர் சமூகத்தையுடைய நாட்டின் வளமான முன்னணி நூலகமாக தொழிற்படுதல்.

### இலக்குகள்

- சகல பொருட்துறைகள் சார்ந்த தரமான நூற் சேகரிப்பை சபை நிதி மற்றும் பொருத்தமான அன்பளிப்புக்கள், நன்கொடைகள் மூலம் சேகரித்து பயனுறச் செய்தல்.
- சிறுவர் மற்றும் மாணவர்களுக்கு பொருத்தமான சிறுவர் நூலகக் கட்டமைப்பை விருத்திசெய்தல்.
- பிரதேச தகவல் சாதனங்களை, பிரதேச ஆக்க முயற்சிகளை, திறன்களை வளர்த்தற் பொருட்டான கலை, இலக்கிய வகைமைகளைச் சேகரித்தல், ஆவணப்படுத்தல், வெளியீடுசெய்தல்.
- வாசிப்பு கலாசாரம் விருத்திபெறும் பொருட்டு அனைத்து வளங்களின் ஊடாகவும் பொருத்தமான நிகழ்ச்சித் திட்டங்களை ஒழுங்கமைத்து நடாத்துதல்.

'அனலை' சஞ்சிகைக்கு தமது சுய ஆக்கங்களை தபாலில் அனுப்ப விரும்புவோர்

'அனலை சஞ்சிகை', பொது நூலகம் அனலைதீவு.

என்ற முகவரிக்கும், மின்னஞ்சல் மூலம் அனுப்ப விரும்புவோர்

analaimagazine@gmail.com

என்ற முகவரிக்கு அனுப்பலாம்.

நூலகர்,
பொது நூலகம் - அனலைதீவு

MRS.THARMILA SENTHURAN
Librarian
Kayts Pradeshiya Shaba
Kayts